இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 06.03.2026

தமிழுக்கு நடிப்பும் இந்தித் திணிப்பும்!

திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயர் சூட்டி இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. 'கர்தவ்ய த்வார்' என்பது இதன் பெயராம். கேட்டால், 'கடமையின் நுழைவாயில்' என்று பொருள் சொல்கிறார்கள். இந்தியைத் திணிப்பது ஒன்றுதான் பா.ஜ.க.வின் கடமை ஆகும். எளிதில் எந்த இடம் கிடைத்தாலும் அங்கு இந்தியைத் திணித்து விடுவதுதான் பா.ஜ.க.வின் வழக்கமான பழக்கம்.

திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவு வாயிலுக்கு இந்தியில் பெயர் வைத்துவிட்டார்கள் என்று தெரிய வந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத் தீரர்கள் திரண்டார்கள். கருப்பு மை கொண்டு இந்தி எழுத்தை அழித்துள்ளார்கள். "ரயில்வே நிர்வாகம் இதனை அகற்ற வேண்டும், இல்லாவிட்டால் போராட்டம் கடுமையாக இருக்கும்" என்று எச்சரித்தார்கள்.

'இந்தித் திணிப்பில் பா.ஜ.க. எல்லை மீறுகிறது' என்று எச்சரித்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். "வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களின் பெயரை 'பவிஷ்ய நிதிபவன்' ஆக்கிவிட்டார்கள். குற்றவியல் சட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயரை வைத்து அதனை ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சகம் 'ஜல்சக்தி'த் துறை ஆக்கப்பட்டு விட்டது. மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டத்தின் பெயரை இந்தியில் ஆக்கிவிட்டார்கள்" என்று பெரிய பட்டியலே போட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

உள்துறை அமைச்சர் அமித்ஷா, இந்தி வளத்துறை அமைச்சராகவே எப்போதும் செயல்பட்டு வருகிறார். 2019 ஆம் ஆண்டு இந்திக்கு ஆதரவாக உள்துறை அமைச்சர் அமித்ஷா கருத்துக் கூறிய போது, "மீண்டும் 1965 கிளம்பும்" என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். 'அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை' என்று உள்துறை அமைச்சர் விளக்கம் அளித்தார். 2012 ஆம் ஆண்டு என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட பாடப்புத்தகத்தில் 1965 மொழிப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துப்படம் இடம்பெற்றிருந்தது. அதனை தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அதன் பிறகு அந்தக் கருத்துப்படம் நீக்கப்பட்டது. இப்படித் தொடர்ந்து திணிப்பதும், எதிர்ப்பு வந்ததும் பின் வாங்குவதும் பா.ஜ.க.வின் நிலையாக உள்ளது.

அவர்கள் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். நாம் அழித்துக் கொண்டே இருக்கிறோம்.

1950 ஆம் ஆண்டு முதல் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தி எழுத்துகளை அழிக்கத் தொடங்கின. அதன் பிறகுதான் புகைவண்டி நிலையங்களிலும், அஞ்சல் நிலையங்களிலும் தமிழில் எழுதியது ஒன்றிய அரசு.

1950 ஆம் ஆண்டு திருச்சியில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டமானது தந்தை பெரியாராலும் தலைவர் கலைஞராலும் நடத்தப்பட்டது. அது முதல் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1ஆம் நாளை "இந்தி எழுத்து அழிப்பு நாளாக" இரண்டு இயக்கங்களும் பல ஆண்டுகளாக நடத்தி வந்தன. அதே திருச்சியில்தான் மீண்டும் இந்தி அழிப்பு நடந்து, அதனைப் பின்வாங்க வைத்துள்ளார்கள் திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகள்.

எத்தனை சாகசங்கள் செய்தாலும் இந்தி மேலாண்மையை தமிழ்நாடு ஏற்காது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை தெளிவானது.

1965 மார்ச் 4ஆம் தேதியன்று மாநிலங்களவையில் உரையாற்றிய அண்ணா தனது மொழிக்கொள்கையை முழுமையாகத் தெளிவுபடுத்தினார்.

1. **இந்தியாவின் ஒருபகுதி மக்களால் பேசப்படும் இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக முடியாது.**
2. **இந்தியாவில் உள்ள முக்கிய மொழிகளான 14 மொழிகளும் இந்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்.**
3. **அந்தப் பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழி ஆகும் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக ஆக வேண்டும்.**
4. **ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளலாம்.**
5. **எங்கள் தமிழ்மொழி மற்ற எதற்கும் தாழாத வகையில், ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும் வரை, நான் அமைதி பெற மாட்டேன். மனநிறைவு கொள்ள மாட்டேன்.**

- இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை ஆகும். தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை ஆகும்.

இதே நிலையில் உறுதியாக இருக்கிறார் இன்றைய முதலமைச்சர். "இந்தியைத் திணிக்கும் புதிய தேசியக் கல்வித் திட்டத்தை நாம் ஏற்க மாட்டோம் என்று சொன்னதற்காக பள்ளிக் கல்வித் திட்டத்துக்குத் தர வேண்டிய ரூ.3 ஆயிரம் கோடி நிதியை நிறுத்தி வைத்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ரூ.5 ஆயிரம் கோடி என்ன, பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம். என்னுள் ஓடுவது தலைவர் கலைஞரின் ரத்தம். நடராசன் - தாளமுத்து - ராசேந்திரன் போன்றவர்களின் கொள்கை உணர்ச்சியால் உந்தப்பட்டவன் என்பதால் தான் நான் அப்படிச் சொன்னேன்." என்று முழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

இந்தித் திணிப்புக்கு எதிராக 1965ஆம் ஆண்டு மாபெரும் மொழிப்போர் நடைபெற்றது. சனவரி 25ஆம் நாளை இதுவரை மொழிப்போர் தியாகிகள் நாளாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்து நினைவு கூர்ந்தது. அதனைப் பல்வேறு அரசியல் இயக்கங்களும் பின்பற்றி வருகின்றன. அந்த சனவரி 25ஆம் நாளை தமிழ்மொழித் தியாகிகள் நாளாக கடைப்பிடிக்க அரசாணை வெளியிட்ட அரசு 'திராவிட மாடல்' அரசு ஆகும். தமிழ் மொழித் தியாகிகள் எந்த நோக்கத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்தார்களோ, அந்த நோக்கத்தோடு நாம் செயல்படுவதுதான் அந்தத் தியாகிகளுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி ஆகும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.3.2026) சென்னையில் நடைபெற்ற திரைப்பட தயாரிப்பாளர் கல்பாத்தி அகோரம் அவர்களின் சகோதரர் கல்பாத்தி –சுரேஷ் அவர்களின் மகன் அபிஷேக் கல்பாத்தி விஷாலா ராமசாமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நினைவில் வாழும் தமிழறிஞர் ஈரோடு தமிழன்பன் (ந. ஜெகதீசன்) அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவரின் வாழ்க்கைத் துணையான திருமதி தி.பா.சாந்தகுமாரி அவர்களுக்கு நூலுரிமைத்தொகை 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் முனைவர் திருமதி தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் குடியிருப்புக்கான ஆவணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அன்பு கட்டளையை ஏற்று

திருச்சி மாநாட்டிற்கு தீரர்கள் அலைகடலென திரண்டு வாரீர்!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மார்ச் 6- "தீரர் கோட்டமாம் திருச்சிக்குத் திரண்டுவா உடன் பிறப்பே ! திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட உறுதியேற்றுக் களம் காண்போம்!" என்று நாம் உயிராய் போற்றி வணங்கும் முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று திருச்சியில் 9-ஆம் தேதி மாலை நடைபெறும் கழக மாநில மாநாட்டிற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக தீரர்கள் அனைவரும் அலைகடலென திரண்டு வரும்படி மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் தி.மு.கழகத்தின் "ஸ்டாலின் தொடரட்டும் - தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற தேர்தல் சிறப்பு மாபெரும் கழக நிர்வாகிகள் மாநாடு வருகிற 9-ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் திருச்சி சிறுகனூரில் மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ளது. 10 லட்சம் கழக நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

"தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திரள்வோம்! திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைப்போம்! திருச்சிக்கு திரண்டு வா உடன்பிறப்பே!" என்று உள்ளன்புடன் உடன் பிறப்புகளுக்கு கடிதம் எழுதி மகிழ்ச்சியுடன் அழைத்துள்ளார்.

திருச்சியில் நடைபெறும் இம்மாபெரும் மாநாடு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய அன்புத்தலைவர் தளபதி அவர்கள் அடையப்போகும் இமாலய வெற்றிக்கு கட்டியம் கூறும் வகையில்

இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வகையில் 10 லட்சம் தி.மு.க. தீரர்கள் திரண்டு சரித்திர சாதனையை படைத்தனர் என்று இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெறும் வகையில் திருப்புமுனை மாநாடாக அமைய உள்ளது.

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத்தலைவர் அவர்களின் அன்புக்கட்டளையை ஏற்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனைவரும் கொள்கை தீரர்களாக தலைவரின்சிப்பாய்களாக பெரும்படையாக திரண்டு வந்து இம்மாநாட்டை வெற்றியடைச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சரித்திர சாதனை படைக்க உள்ள இம்மாபெரும் மாநாட்டில் கலந்து கொள்வது "நமது உரிமை""நமது கடமை" என்ற அந்த லட்சிய உணர்வோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் - கழக தீரர்கள் அனைவரும் 9-ஆம் தேதி மாலை 3.00 மணிக்கெல்லாம் திருச்சி சிறுகனூர் மாநாட்டு திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்கும் படி தங்களை இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்காக ஒப்பாக இதுவரை இதுப்போன்ற பிரம்மாண்டமான மாநாடு நடைபெற்றது இல்லை என்று அனைவரும் கூறும் வகையில் நம்முடைய மாவட்டத்தில் உள்ள கழகத்தினரும் அலைகடலென திரண்டு வாரீர்!! வாரீர் !! என்று அக மகிழ்ந்து அன்புடன் அழைக்கிறேன்.

மாற்றுக் கட்சியினரும் மிரண்டு போகும் வகையில், வருகிற 2026-ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க. தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ. தலைமை!

அம்பத்தூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம் !

தராசு ஷியாம், டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி, பட்டிமன்றம் ராஜா, வி.சி.குகநாதன் வாழ்த்துரை!

சென்னை, மார்ச்.6- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், அம்பத்தூர் வடக்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா–35, செந்தமிழ் நாடே முதலிடம்! திராவிட மாடலே நிரந்தரம்! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 07.03.2026, சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர், ராம் நகர், மகாலட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டாக்டர். ஜி.சாந்தகுமார் எம்.சி, வி.ரமே (எ) நிலகண்டன் எம்.சி, LPF மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி. வி.நாகவள்ளி எம்.சி, து.ஆயிரம், கு. கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், க.முரளிபாபு, அ.செல்வம், க. கதிஜா, மா.ரமேஷ், வி.ரவீந்திரன், வெ.இராதாகிருஷ்ன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, க.பொற்கொடி எம்.சி, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா சந்தானம் எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி. முன்னிலை வகிக்கின்றனர்.

அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வீ.மூர்த்தி, பொன்.நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ். பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா.அருண், கோ.சேகர்லால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் மூத்த பத்திரிக்கையாளர் தராசு ஷியாம், மேனாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் ஆலோசகர் டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி, பட்டிமன்ற பேச்சாளர் பட்டிமன்ற ராஜா, திரைப்பட இயக்குநர் வி.சி.குகநாதன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, சன்.முனியாண்டி, மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன் எம்.எல்.ஏ., கே.எஸ். இரவிச்சந்திரன்,கே.சந்துரு சி. மகேஷ்குமார், சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த் கே.எஸ்.எம்.நாதன் எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா பரிதிஇளம்சுருதி MC ஆர்.வரதன் வழக்கறிஞர் இந்திரஜித், மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன் MC இசட்.ஆசாத் M.C மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் MC சரி தாமகேஷ்குமார் MC ஸ்ரீராமுலு. MC. பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன்MC சொ.வேலு V.சுதாகர் எம்.சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி. பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ. மணி எஸ்.பன்னீர்செல்வம் டி.வி. செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் பு.வீரா (எ) வீரராகவன் நன்றி கூறுகிறார்.